**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**Spl.Case No.1/2019**
**Prosecution Witness P.W. 33**
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. தினேஷ்குமார் | Calling | : கூலி |
| Father's name | : திரு. முத்துசுந்தர்ராஜ் | Religion | : இந்து |
| Village | : செம்பியனேந்தல் | Age | : 43 |
| Taluk | : மதுரை | | |

நாள் - **13.03.2026**

**எதிரிகள் ஆஜர்).**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது மதுரை மாவட்டம் செம்பியனேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். 1ம் எதிரி எனது அண்ணி ஆவார், 2ம் எதிரி எனது உடன்பிறந்த அண்ணன் ஆவார். சோழவந்தான் அருகே அம்மச்சியாபுரத்தில் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான கூட்டுப்பட்டாவில் விவசாய நிலம் 3 ஏக்கர் உள்ளது. அந்த நிலம் எனது பெயரிலும், சரவணக்குமார் மற்றும் 2ம் எதிரி ஆகியோர் பெயரிலும் உள்ளது. மேற்படி நிலத்தை 2011ம் வருடம் எனது மாமா மகன் சுப்பிரமணி, அண்ணன் மகன் கஜபதி ஆகியோருக்கு ஒத்திக்கு கொடுத்தோம். சுப்பிரமணியிடம் இருந்து ரூ.2,00,000 ஒத்தி பணமாகவும், கஜபதியிடமிருந்து ரூ.2,00,000/- ஒத்தி பணமாகவும் பெற்றுக் கொண்டு, ஒத்தி பத்திரத்தில் கையொப்பம் செய்து கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண்.1460, தேதி 31.03.2011 ம் தேதியிட்ட ஒத்திப்பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் **அ.சா.ஆ.45** ஆகும். (மேற்படி ஆவணம் எதிரிகள் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது) மேற்படி ஒத்திப்பத்திதரத்தில் உள்ள மூன்றாவது கையொப்பம் என்னுடைய கையொப்பம் ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண்.1461, தேதி 31.03.2011 ம் தேதியிட்ட ஒத்திப்பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் **அ.சா.ஆ.46** ஆகும். (மேற்படி ஆவணம் எதிரிகள் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது). மேற்படி ஒத்திப்பத்திரத்தில் உள்ள மூன்றாவது கையொப்பம் என்னுடைய கையொப்பம் ஆகும். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

அ.சா.ஆ.45 மற்றும் 46 ஆவணங்கள் இரண்டு ஆண்டு காலத்திற்காக ஏற்பட்டது ஆகும் என்றால் சரிதான். மேற்படி ஒத்திவிட்டது போல அதே நபர்களுக்கு 2007- 2008 ஆண்டுக்கு ரூ.2,00,000/-க்கும், 2008-2009 ஆண்டுக்கு ரூ.2,00,000/-க்கும், 2009-2010 ஆண்டுக்கு ரூ.2,00,000/-க்கும், 2010-2011 ஆண்டுக்கு ரூ.2,00,000/-க்கும் ஒத்திவிடப்பட்டு, அவ்வாறு கிடைக்கப் பெற்ற ரூ.8,00,000/-ஐயும் எனது அண்ணனான 2 ம் எதிரியிடம் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.45 மற்றும் 46 ஆகிய ஆவணங்களின்படி பெறப்பட்ட மொத்தம் ரூ.4,00,000/-ஐயும் என் அண்ணன் 2 வது எதிரியிடம் கொடுக்கப்பட்டது. 2007 முதல் 2011 முடிய ஒத்திக்கு விடப்பட்ட மேற்படி நிலங்களையும், 2011 ம் ஆண்டு ஒத்திக்குவிட்ட நிலத்தையும், ஒத்தி பெற்ற நபர் அந்த நிலத்தில் விவசாயம் செய்து, அந்த விவசாயத்தின் மூலம் பெறக்கூடிய லாபத்தை அவர் அனுபவித்துக் கொள்வது என்றும், அவ்வாறு அவர் அனுபவிக்கும் காரணத்தால் ஒத்தி அ.சா.ஆ.45 மற்றும் 46 மூலம் பெற்ற ரூ.4,00,000/-ஐயும், 2007 முதல் 2011 வரை ஒத்திக்குவிட்டு பெற்ற மொத்தம் ரூ.8,00,000/-ஐயும் என் அண்ணன் 2 ம் எதிரி ரவிக்குமார் அவர்கள் பணத்தை வைத்துக் கொள்வது என்றும், அதை ஒத்தி பெற்ற நபருக்கு திருப்பி செலுத்த வேண்டியது இல்லை என்றும் சொன்னால் சரிதான்.

<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

மேற்படி 2 ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

ஒப்பம்/-*****
சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.03.13 15:17:54 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**Spl.Case No.1/2019**
**Prosecution Witness P.W. 34**

.....

Name : திரு. A. முத்துக்குமார் Calling :கூலி

Father's name : திரு. ஆண்டி Religion : இந்து

Village : நாகனாகுளம் Age : 61

Taluk : மதுரை

நாள் - **13.03.2026**

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை நாகனகுளத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 1ம் எதிரி எனது மருமகள், 2ம் எதிரி எனது அண்ணன் மகன் ஆவார். மதுரை மாவட்ட கருப்பட்டி கிராமத்தில் எனது பெயரிலும், என் அண்ணன் முத்துசுந்தர்ராஜ் பெயரிலும் விவசாய நிலங்கள் 5 ஏக்கர் நிலம் உள்ளது. எனது பெயரிலும், என் அண்ணன் பெயரிலும் அந்த நிலம் 1990-1991ம் வருடத்தில் வாங்கப்பட்டது. மேற்படி நிலத்தில் சரிபாதியாக பங்கு பிரித்து, நான் பாதியாகவும், எனது அண்ணன் மகன்கள் பாதியாகவும் விவசாயம் செய்து வருகிறோம். ஏக்கருக்கு 10 முதல் 15 மூடைகள் நெல் வருமானம் வரும். என்னிடம காண்பிக்கப்படும் கூட்டுப்பட்டா மேற்படி நிலத்தின் ஆவணம் ஆகும், அதை தற்போது 2ம் எதிரி மற்றும் அவரது சகோதர்கள் அனுபவித்து வருகிறார்கள். மேற்படி கூட்டுப்பட்டா நகல் **அ.சா.ஆ.**47 ஆகும். இதுசம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நானும், என் அண்ணன் மகன்களும் சரிபாதியாக பிரித்துக் கொண்டோம் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நான் லஞ்ச ஒழிப்பு போலிசாரிடம் ஆஜர்படுத்தவில்லை என்றால் சரிதான். என் அண்ணன் மகன்கள் அவர்கள்

பங்கிற்கு கிடைத்த 3 ஏக்கர் நிலத்தை ஒத்திக்குவிட்டு பயன்பெற்றார்கள் என்று எனக்கு தெரியும்.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

மேற்படி 2ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.03.13 15:18:03 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.